[14th March 1966

கட்டினுல் நன்ருக இருக்குமென்றும் நான் ஆலோசனை சொன்னேன். நான் இந்தத் தகவலைக் குற்றமாகச் சொல்லவில்லை. புள்ளி விவரம் சேகரிப்பதில், எங்கோ, ஏதோ, எப்படியோ தவறு இருக்கிறது என்பது தெளிவாகப் புலப்படுகிறது. ஆகவே, இதைத் திருத்தி செம்மையான புள்ளிவிவரத்தை இந்தச் சபைக்குச் சமர்ப்பிக்க அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். அப்படி முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கத்தினுடைய கடமை கிடைக்கக்கூடிய புள்ளிவிவரங்களை முறையாகக் கொடுக்கக் கூடியது. அங்கத்தினர் சொல்லுகின்ற பகுதி குறுவைப் பகுதியாக இருக்கிறதா என்பதைத் தெரிந்துதான் கூற வேண்டும். தஞ்சையிலே எல்லா நிலங்களும், அங்கே இருக்கக்கூடிய 12, 13 லட்சம் ஏக்கர்களும் குறுவைச் சாகுபடி நிலங்கள் இல்லை. குறுவைச் சாகுபடி நிலங்கள் 2 அல்லது 2½ லட்சம் தான் இருக்கும். இதைத் தவிர எங்கெங்கெல்லாம் மேட்டுப் பிராந்தியமாக இருக்கிறதோ அங்கெல்லாம் குறுவைச் சாகுபடி நடப்பது இல்லை. கனம் அங்கத்தினர் குறிப்பிட்ட பகுதி குறுவைப் பகுதி; அது தண்ணீர்ப் பற்றாக்குறையால் தரிசாகப்போய்விட்டது என்று சொன்னுல் அதைப்பற்றி நான் தெரிந்து தான் சொல்ல முடியும்.

திரு. கே. எ. மதியழகன் : விளைச்சல் நிலங்களில் தண்ணீர் இல்லாத காரணத்தால் விளையவில்லை என்று கூறி வரி வாஜா செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிருர்கள். ஆனுல் தரிசு நிலங்களைப் பொறுத்தவரையாவது முதல் கட்டமாக வரி வஜா செய்யும் உத்தரவைப் பிறப்பிக்க முன் வருவார்களா ? 9-00 a.m.

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினர் அவர்கள் ரெவின்யூ இலாகா விதி முறைகளை அறிந்திருந்தால் இந்த உப கேள்வியைக் கேட்பதற்கே இடம் இருந்திருக்காது. எங்கெங்கு தரிசு நிலங்கள் இருக்கின்றன என்ற கணக்கு இலாகாவிடம் இருக்கிறது. அதற்கு என்ன நிவாரணம் கொடுக்க வேண்டுமென்பதைப் பற்றி அரசாங்கம் உத்தரவிட வேண்டுமென்று அதிகாரிகள் காத்துக் கொண்டிருக்கமாட்டார்கள், அதிகாரிகளே வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்கள்.

திரு. கோ. சி. மணி : தஞ்சை மாவட்டத்திலே ஒரு ஏக்கருக்கு மூன்று கலத்திற்கு உட்பட்டு விளைந்த நிலங்களைப் பற்றிய கணக்கைத் தயாரித்து அனுப்ப வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமையா : அரசாங்கத்திலிருந்து அது போன்ற உத்தரவு போனதாகத் தெரியவில்லை.

Water from Krishnarajasagar

*277 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to approach the Government of Mysore for release of adequate

14th March 1966]

supply of water from Krishnarajasagar for relieving the present scarcity in water supply for irrigation purposes in Thanjavur Delta area; and

(b) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (a) There is no proposal at present.

(b) Does not arise.

திரு. வை. சங்கரன் : இந்தக் கேள்வி கேட்கப்பட்டது 3, 4 மாதங்களுக்கு முன்னால் . அப்போது இருந்த நிலைமை பற்றிக் கேட்கப்பட்டது. அந்த நேரத்தில் ஸ்கேர்சிடியைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : நான் சொன்ன பதிலும் அன்றைக்கு இருந்த நிலையைக் குறித்துத்தான். இன்றைக்கு அது போன்று குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. கேள்வி கேட்ட நேரத்தில் கிருஷ்ணராஜ சாகரத்தில் தண்ணீர் குறைவாக இருந்த காரணத்தால் அவர்களிடத்தில் கேட்பது லாபகரமாக இருக்காது என்று கருதப்பட்டது.

Drinking water scheme

* 278 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government are aware of the drinking water scarcity prevailing in the towns of Coimbatore and Podanur; and

(b) if so, the steps proposed for alleviating the same?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) Yes.

(b) The Government have sanctioned the investigation for augmenting water supply to Coimbatore from 'Bhavani' river. The investigation has been completed and the outline proposals are being prepared. It is also proposed to construct an additional dam across Siruvani river with the concurrence of the Kerala Government so that more water can be drawn from the river for supply to the town.

Podanur is a part of Kurichi Panchayat. A proposal for sanctioning a water supply scheme to the Panchayat is under examination by Government.

திரு. கே. ஏ. மதியழகன் : கோவையிலும், போத்தனூரிலும் ஒரு குடம் தண்ணீர் 4 அணா, 8 அணா என்று விற்கப்படுகிறது. நீண்ட காலத் திட்டத்திற்குப் பதிலாக இதற்கு உடனடியாகப் பரிகாரம் காண அரசாங்கம் என்ன திட்டத்தை வைத்திருக்கிறது ?